பக்கங்கள் - 08
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka
மின்னிதழ்

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 14 வெள்ளிக்கிழமை (28.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# பயணத் தடை நீடிப்பு குறித்து இன்று தீர்மானம்

## கொழும்பில் உயர்மட்ட கலந்துரையாடல்
## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

*(கொழும்பு)*

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயணத் தடையை நீடிப்பது குறித்து இன்று தீர்மானம் எடுக்கப்படும் என இராணுவத் தளபதியும் தேசிய கோவிட் தடுப்பு செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் 31ஆம் திகதி தளர்வு குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)



## அஞ்சல் அலுவலகங்கள்
### இன்றும் நாளையும் திறக்கப்படும்

(கொழும்பு)

நாடுமுழுவதும் உள்ள அஞ்சல் அலுவலகங்கள் இன்று 02

## கொரோனா மேலும் 56 மரணங்கள்

(கொழும்பு)

நாட்டில்மேலும் 56 கொரோனா 02

### யாழில் பாதுகாப்பு முன்னேற்பாடாக
## மதுபானசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாதுகாப்பு முன்னேற்பாடாக மதுபானசாலைகளுக்கு முத்திரையிடப் 02

### கொரோனா
## +2,572

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2.572 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று 02

### யாழ்ப்பாணத்தில்
## 24 நாட்களேயான சிசுவுக்கு கொரோனா

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் பிறந்த 24 நாட்களேயான சிசுவுக்கு, கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூன்று நாட்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிசு தெல்லிப்பழை ஆதார வைத்திய 02

## 15 பருத்தித்துறை ஓடக்கரையில் பேருக்கு கொரோனா
### எழுமாற்றுப் பரிசோதனையில் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை - ஓடக்கரை பகுதியில் 37 பேரிடம் நடத்தப்பட்ட எழுமாற்று அன்டிஜன் பரிசோதனையில் 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிப்புக்கமைய நேற்று வியாழக்கிழமை ஓடக்கரைக் கிராமத்தில் 37 பேரிடம் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட் 02

### பயணக் கட்டுப்பாட்டின்போது
## கொடிகாமத்தில் இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் இருந்தவேளை தென்மராட்சி கரம்பகம் பகுதியில் நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவரின் கைவிரல் 02

## ஐஸ் போதையை பயன்படுத்திய
### இளம் பெண் மரணம்

(கொழும்பு)

அதிகளவில் ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்திய 34 வயதான பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02

## கடலுணவுகளை அச்சமின்றி மக்கள் உண்ண முடியும்
### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(கொழும்பு)

கடலுணவுகளை உட்கொள்வதற்கு மக்கள் தயங்கத் தேவையில்லை என்று தெரிவித்துள்ள கடற்றொழில் துறை அமைச்சர் டக்ளஸ் தேவா 02

### கொரோனாத் தொற்றால்
## யாழில் இரு வயோதிப பெண்கள் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான இரு வயோதிபப் பெண்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.கோப்பாய்ப் பகுதியில் கொரோனா தொற்று காரணமாக வயோதிப் பெண் ஒருவர் 02

LK Newspapers
BTamil.com

# யாழில் வயோதி...

நேற்று உயிரிழந்துள்ளார்.

சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவருக்கு பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

மேலும் ஒருவர் கொக்குவில் மஞ்சவனப்பதி பகுதியைச் சேர்ந்த 95 வயதுடைய வயோதிபப் பெண் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# அஞ்சல்...

வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் கொடுப்பனவுகள், விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான ஓய்வூதியம், முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மட்டுமே செயற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-3)

# பருத்தித்துறை...

டது.

அவர்களில் 15 பேருக்கு கோவிட் - 19 நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஓடக்கரைக் கிராமத்தில் அண்மைய நாட்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுவரும் நிலையில் இந்த சிறப்பு பரிசோதனை அங்கு நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ம-3,18,33,60)

# மதுபானசாலை...

படுவதாக (சீல்) மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பயணத்தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பயணத்தடை தற்காலிகமாக தளர்த்தப்படும் காலப்பகுதியில் மதுபான சாலைகளைத் திறக்க அனுமதியில்லை என்று அறிவுறுத்தியுள்ளது.

அதனால் நாடுமுழுவதும் மதுபான சாலைகள் மதுவரித் திணைக்களத்தினரால் பூட்டப்பட்டு முத்திரையிடப்படுகிறன.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சட்டத்துக்குப் புறம்பாக அதிக விலைகளில் மதுபான விற்பனைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

# கடலுணவுகளை...

னந்தா, கப்பல் விபத்துக்குள்ளான கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட கடல் பிரதேசத்தில் மீன்பிடி செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்திற்கு இரசாயனப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை ஏற்றிவந்த சரக்குக் கப்பலில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக உயிரினங்களுக்கு கேடு ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் கடலில் கலந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

இதன்காரணமாக கடலுணவுகளை உண்பது தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச நிலையை நீக்கும் வகையில் கடற்றொழில் துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-3)

# 29...

மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில், நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 1,325 ஆக அதிகரித்துள்ளது.

மட்டக்குளி, கொழும்பு - 15, கொழும்பு - 14, வாழைச்சேனை, நாவலப்பிட்டி, ஹப்புகஸ்தலாவ, இரத்தொட்டை, குருநாகல், ஹாலிஎல உள்ளிட்ட பகுதிகளில் கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த 20 வயதான யுவதி தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஏனையோர், 46 முதல் 94 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

# கொடிகாமத்தில்...

துண்டாடப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி இளைஞன் தனது வீட்டில் இருந்த நிலையில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த சுமார் 10 பேர் கொண்ட குழுவினர் இளைஞனை வெளியே அழைத்து வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த குழுவினர் கைவிட்டுச் சென்ற ஒரு மோட்டார் சைக்கிள் சம்பவ இடத்திலிருந்து கொடிகாமம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18,33,60)

# பயணத் தடை...

இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது.

தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்வதற்கு விசேட கூட்டம் ஒன்று இன்று இடம்பெறும். இதன் போது பயணத் தடையை நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும்.

மேலும் 31ஆம் திகதி அத்தியாவசிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக அன்றைய தினம் பயணத் தடையை தற்காலிகமாக தளர்த்துவது தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அது குறித்தும் இன்று தீர்மானிக்கப்படும் என இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார். (ம-3)

# 24 நாட்களே...

சாலையில் அனுமதிக்கப்பட்டது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் மூலம் சிசுவுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது சிசு வைத்திய நிபுணர்களின் விசேட கண்காணிப்பின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, குறித்த சிசுவின் தாய்க்கும் தொற்று உறுதியாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## தமிழ் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி கோரி

# இந்திய உயர்ஸ்தானிகருக்கு சி.வி.விக்னேஸ்வரன் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி கோரி இந்திய உயர்ஸ்தானிகருக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் வகையில் அதிகளவிலான கோவிட் - 19 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் கோவிட் தடுப்பு ஊசிகள் மிக அவசரமாக எமது வட-கிழக்கு மக்களுக்கு தேவையாக உள்ளது.

இவ் ஆபத்தான நிலைமைபற்றி யாழ்.இந்தியத் துணை தூதரகமும் நன்றாக அறிந்திருக்கும்.

இந்நிலையில் இலங்கை அரசால் தருவிக்கப்பட உள்ள சீன தடுப்பு ஊசிகளில் எவ்வளவு எம்மக்களுக்கு கிடைக்கும் என்று தெரியாது. இலங்கை அரசாங்கமும் இந்திய மத்திய அரசிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது. ஆனாலும் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமைபற்றியும் நாம் அவதானித்துள்ளோம். எனினும் வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் எதிர்கொள்ளும் இவ் ஆபத்தான நிலைமையில் இந்திய அரசின் சாத்தியமானளவு உதவிகளை பற்றாக்குறையாக உள்ள தடுப்பூசிகள் சம்பந்தமாக எதிர்பார்த்துள்ளார்கள்.

தங்களிடமிருந்து சாதகமான பதிலை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# +2,572...

நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 174,849 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

# ஐஸ் போதையை

மக்கொன பிரதேசத்தைச் சேர்ந்த ஹேவா தேவகே சனோஜா கல்ஹாரி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3)




LK Newspapers BTamil.com

*உயர்ந்த எண்ணங்கள் உடையோர் ஒருநாளும் தனித்தவராகார்.*

*– சார் ஃபிலிப் சிட்னி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் ஈழத் தமிழினத்தின் இரண்டாவது ஆறுமுகநாவலர்

*"...ஆற்றெதிர்ப்படல் நோற்றதன் பயனே"* என்கிறது புறநானூறு.

இதன்பொருள்; நல்லவர்களை, பெரியவர்களை, ஆத்ம ஞானம் மிக்கவர்களை பிறர்க்காக வாழுகின்ற பெருந்தகைகளை சந்திப்பதென்பது நாம் முன் செய்த தவத்தின் பயன் என்பதாகும்.

உண்மை; ஈழத் தமிழினம் பல்வகைமைச் சான்றோர்களை காலத்துக்குக் காலம் பெற்றெடுத்து தன் பெருமையை நிலைநிறுத்தி வருகிறது.

அந்தவகையில், எம் தமிழினத்துக்குக் கிடைத்த மிகப்பெரும் ஆன்மிகச் சொத்து செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் என்பது ஆன்றோர் பெருமக்களின் கணிப்பு.

எங்கள் ஈழத் தமிழினத்தின் பெருமையை நிலைநாட்டுகின்ற பேராற்றல் கொண்டவர் அவர்.

அவரின் ஆழ்ந்தகன்ற சிந்தனை எம் இனத்துக்கு மிகப்பெரும் பயனாற்றலைத் தந்தருளுகிறது.

காலம் உணர்ந்து, எங்கள் மக்கள் சமூகத்துக்குத் தேவை எது? என்பதை ஆய்ந்தறிந்து அதனைத் தருகின்ற மெய்ஞான சக்தி கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களுக்கு உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்ட நம் ஈழ மண்ணில் சிவபூமி அறக்கட்டளையை ஆரம்பித்து அதனூடு கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் ஆற்றிவருகின்ற பணிகள் வரலாற்றுப் பெருமைக்குரியவை.

சுருங்கக்கூறின் அரச கட்டமைப்பால் கூட செய்வது கடினம் என்ற விடயங்களை கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் ஆர்ப்பரிப்பும் ஆரவாரமும் இன்றி மிகப் பக்குவமாகச் செய்து முடிக்கின்றார் எனில், அதற்கு மூலகாரணம் அவருக்கு இறைவனால் வழங்கப்பட்ட ஆன்ம பலம் என்பதை நாம் உணர முடியும்.

ஆம், கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் ஆற்றுகின்ற உரைகள் கேட்போரை சிந்திக்க வைக்கும் செழுமையுடையவை.

அதிலும் குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் எங்கள் புலம்பெயர் உறவுகள் அவர் மீது அளவு கடந்த அன்பும் நம்பிக்கையும் கொண்டுள்ளனர்.

எந்த வேலைத்திட்டமாயினும் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் கேட்டால், அதற்கு உதவி செய்வோம் என்ற மனநிலையில் புலம் பெயர் உறவுகள் பலர் இருக்கின்றனர்.

அந்தளவுக்கு அவரின் பணிகள் எங்கள் மக்களின் மனங்களில் ஆழப் பதிந்துள்ளன.

ஆம், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை, முதியோர் இல்லம், யாத்திரிகர்கள் தங்குமிடங்கள், திருவாசக அரண்மனை, தொல்பொருள் அருங்காட்சியகம், மருத்துவ சேவைக்கான உதவிகள், ஏழை மாணவர்களின் உயர் கல்விக்கான கொடைகள் என கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் அறப்பணி நீண்டு செல்கிறது.

துறவற வாழ்வினூடு மக்கள் பணி செய்கின்ற அப்பெருமகன் எங்கள் தமிழினத்தின் இரண்டாவது ஆறுமுகநாவலர். அவருக்கு இன்று அகவை அறுபது.

இவ்வேளை உலகு வாழ் தமிழ் உறவுகளோடு சேர்ந்து நாமும் அவரைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம். வாழிய வாழியவே.

### மேலும் சில துறைகளை

# அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

கோவிட் - 19 தொற்றுநோய் நெருக்கடிக்கு மத்தியில் சில துறைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி அரசாங்கத்தால் அதிவிசேட வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இந்த அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார். துறைமுக அபிவிருத்தி அதிகார சபை, பெற்றோலிய உற்பத்தி உள்ளிட்ட அனைத்து விதமான எரிபொருள் விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல், துறைமுகங்கள் மற்றும் கடற்றொழில் சேவை, ரயில்வே ஆகியன இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி உதவியாளர் சேவை உள்ளடங்கலாக பிரதேச மட்டத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து அரச ஊழியர்களினது சேவைகளும் குறித்த வர்த்தமானியினூடாக அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட அனைத்து அரச வங்கிகள், காப்புறுதி சேவைகள், உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவ சேவை ஆகியனவும் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (ம-3)

### வவுனியா மாவட்டத்தில்

# 7 பொலிஸார் உட்பட 13 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் 7 பொலிஸார் உட்பட 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில், வவுனியா நிலைய பொலிஸார் 7 பேருக்கும் நெளுக்குளம் பகுதியில் ஒரே குடும்பத்தைச் 7 வயது சிறுமி உட்பட இருவருக்கும், குட்செட் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கும் வவுனியா சிறைச்சாலை கைதிஒருவருக்கும் வவுனியா நகரில் ஒருவருக்கும் ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்றில் கடமையாற்றும் ஒருவருக்கும் என 13 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ம-3.250)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# கொரோனா அச்சுறுத்தல்

### நேற்றும் 114 பேருக்கு தொற்று

(மட்டக்களப்பு)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான மேலும் 114 பேர் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நா. மயூரன் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள புள்ளி விபரக்குறிப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள விபரம் வருமாறு.

மட்டக்களப்பில் 12 பேர், களுவாஞ்சிக்குடியில் 8 பேர், வாழைச்சேனையில் 12 பேர், காத்தான்குடியில் 15 பேர், ஓட்டமாவடியில் 4 பேர், கோரளைப்பற்று மத்தியில் 14 பேர், செங்கலடியில் 7 பேர், ஏறாவூரில் 4 பேர், பட்டிப்பளையில் 6 பேர், வவுணதீவில் 16 பேர், வெல்லா வெளியில் 3 பேர்,ஆரையம்பதியில் 11 பேர், கிரானில் 2 பேர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம.3)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலம். கண்ணபிரான் கீதையில் " அருச்சுனா! நான் மாதங்களில் மார்கழி மாதமாக இருக்கிறேன்" என்கிறார். இந்த சிறந்த மாதமாகிய மார்கழியில் ஒருநாள் விடியற்காலை வழிபாடு செய்தால் அப்பயனுக்கு கோடி தினம் பூஜித்த பயன் நிகராகாது என்று சிவாகமம் செப்புகின்றது. (தொடரும்)**

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## புதிதாக சிந்தனை செய்

புதிதாக சிந்தனை செய்ய, இதுவரை உங்களிடம் உள்ள எல்லா எண்ணப்பதிவுகளிலிருந்தும் நீங்கள் விடுதலை பெற வேண்டும். இந்த நொடியே எல்லா எண்ணப் பதிவுகளையும் விட்டு விடுங்கள். வெறுமையாகக் காலியாக இருங்கள்.

ஒருவர் பேசுகிறார். அந்தச் சப்தம் உங்களுக்கு அந்த வார்த்தையின் அர்த்தத்தை உடனே சேர்க்கிறது. அதைப்போல, நீங்கள் உட்கார்ந்திருப்பதற்கும் நின்று கொண்டிருப்பதற்கும் பேசிக் கொண்டிருப்பதற்கும் உறுதிப்பாடோ, அத்தாட்சியோ தேவையில்லை.

விடுதலை வேண்டும் என்ற எண்ணமே இக்கணமே உங்களை விடுதலை செய்து விடுகிறது.

விடுதலை நம் இயல்பு என்கிற தெளிவான உணர்வு ஏராளமான சக்தியைத் தருகிறது.

இந்த ஞானத்தை மறந்துவிட்டு புதியவராக இருங்கள்! (சிரிப்பு) (தொடரும்)

### அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தர்ப்பைப் புல்லின் விசேட நன்மைகளை அறிந்ததுண்டா?

தர்ப்பைப் புல் தண்ணீர் இல்லாவிட்டாலும் பல நாட்கள் வாடாது. நீர் நிலையில் தோய்ந்தே இருந்தா லும் அழுகாது. இதனை "அம்ருத வீரியம்" என் றும் சொல்வர். இந்தப் புல் உலர்ந்து போனாலும் இதன் வீரியம் குறையாது. சூரிய கிரகணத்தின் போது இதன் வீரியம் அதிகமாகும்.

தர்ப்பையை தேவ காரியங்களுக்கு கிழக்கு நுனியாகவும், பித்ரு காரியங்களுக்கு தெற்கு நுனியாகவும் பயன்படுத்துவார்க. தர்ப்பை உஷ்ண வீரியமும், அதிவேகமும் கொண்டது. மேலும் பஞ்ச லோகங்களில் தாமிரத்தில் உள்ள மின்சார சக்தி தர்ப்பையிலும் உண்டு. எனவேதான் கோவில் கும்பாபிஷேகங்களில் தங்க, வெள்ளி கம்பிகளின் இடத்தில் அருளைக் கடத்த தர்ப்பையைப் பயன்படுத்துவார்கள்.

(தொடரும்)

LK Newspaper BTamil.com



# இந்தியா, கட்டார் அனுமதி மறுப்பு பற்றி எரியும் கப்பலின் புதிய தகவல்



**( கொழும்பு )**

**கொழும்பு துறைமுகத்தில் தற்போது தீப்பற்றி எரியும் எம்.வி. எக்ஸ்-பிரஸ் போர்ள் கப்பள் கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைவதற்கு முன்னர் இந்தியா மற்றும் கட்டார் துறைமுகங்களுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.**

**இரசாயன கசிவு ஏற்பட்டது கண்டறியப்பட்ட பின்னர் இந்தக் கப்பல் நுழைய இந்தியாவும் கட்டாரும் அனுமதி மறுத்ததை தங்களால் உறுதிப்படுத்த முடியும் என சிங்கப்பூரைச் சேர்ந்த கடல் வலைத்தளமொன்று தெரிவித்துள்ளது.**

தற்போது கப்பலில் உள்ள கொள்கலன் கழிவுகள் கொழும்பு கரையோரப் பகுதிகளுக்குப் பரவியுள்ளன. இந்தக் கழிவுகள் தீங்கு விளைவிக்கும் என்பதால் அவற்றைத் தொட வேண்டாம் என மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் அரேபிய கடலில் இருந்தபோது கப்பலில் இரசாயன கசிவு ஏற்பட்டதை கப்பல் குழுவினர் கண்டறிந்தனர் என சிங்கப்பூரைச் சேர்ந்த கடல் வலைத்தளமான ஸ்பிளாஷ் இணைய தளத்துடன் பேசிய எக்ஸ்-பிரஸ் கப்பல் நிறுவன நிர்வாகத் தலைவர் டிம் ஹார்ட்நால் தெரிவித்தார்

மோசமான பொதியிடலே இரசாயன கசிவுக்கு காரணம் எனவும் அவர்தெரிவித்தார்.

கப்பலில் இரசாயன கசிவு ஏற்பட்டதைக் கண்டறிந்ததும் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள ஹசிரா மற்றும் கட்டாரில் உள்ள ஹமாத் ஆகிய இரண்டு துறைமுகங்களை கப்பலின் கப்டன் தொடர்பு கொண்டார். ஆபத்துக்குரிய கொள்கலன்களை இறக்க உதவுமாறு அவர் கேட்டுக்கொண்டார். எனினும் அந்தக் கோரிக்கை இரு நாடுகளாலும் நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்தே சீனாவின்கடற்பிராந்தியத்துக்குச் சென்ற கப்பல் அங்கிருந்து இலங்கை நோக்கி வந்தாக தெரியவருகிறது (4-6)

## நாட்டின் பல பகுதியில் மின்சாரம் தடை

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் மழை - காற்றுடனான காலநிலை காரணமாக நாடு முழுவதும் பல பகுதிகளில் மின்சார தடை ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார சபையின் தொலைபேசி நிலையத்திற்கு மணித்தியாலத்திற்கு 5000 அழைப்புகள் வருவதாக அதன் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சூறாவளிபாதிப்பு காரணமாக இலங்கையின் பல பகுதிகளில் கடுமையான மழையுடன் கூடிய காற்று வீசியுள்ளது. இதன் காரணமாக நேற்று முன் தினம் மாலை முதல் நாட்டின் பல பிரதேசங்களில் மின்சார தடை ஏற்பட்டுள்ளது.

76 ஆயிரம்வீடுகளுக்கு மின்சார தடை ஏற்பட்டுள்ளது. கடும் காற்றுடன் மரங்கள் முறிந்து விழுந்தமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. நிலைமை வழமைக்கு கொண்டுவருவதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் சீரற்ற காலநிலை காரணமாக தாமதம் ஏற்படுவதாக மின்சார சபையின் தலைவர் தெரிவித்தா". (4-6)

## பல மில்லியன் நிதி மோசடி ஒருவர் கைது

(கொழும்பு)

மகரகமை பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் 910 மில்லியன் ரூபாய் நிதி மோசடி செய்த சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் மொனராகலை பிபிலை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

சந்தேக நபர் நுகேகொடை கங்கொடவில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் அடுத்த மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (4-6)

## அமில மழை பெய்ய வாய்ப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திற்கு 9.5 கடல் மைல் தொலைவில் நங்கூரமிடப்பட்டிருந்த எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலில் தீப்பரவல் அதிகரிக்குமாயின் அதிலுள்ள எரிபொருள் கடலில் கலப்பதை தடுக்க முடியாது.

எனவே எரிபொருள் கசிவு ஏற்பட்டால் அதனை உடனுக்குடன் தூய்மைப்படுத்துவதே தற்போதுள்ள ஒரே மாற்று வழி என்று தேசிய கடற்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹறன்டாபுர தெரிவித்தார்.

இதே வேளை தீப்பரவலால் நைதரசன் வாயு வெளியேறியுள்ளமையால் அமில மழை பெய்யக் கூடிய வாய்ப்புள்ளதால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். அத்தோடு கப்பலிலிருந்து விழுந்து கரையொதுங்கிய பொருட்களை தொட்ட சிலரது கைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் தர்ஷனி லஹறன்டாபுர சுட்டிக்காட்டினார். (4-6)

## தப்பிச் சென்றவர் சிக்கினார்

கொழும்பு கொள்ளுபிட்டி பிரதேசத்தில் தனியார் வைத்தியசாலையொன்றில் இருந்து தப்பிச் சென்ற கொரோனா தொற்றாளர். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்ட பின்னர். கடந்த 25 ஆம் திகதி குறித்த வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-6)

## 587 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 587 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதயில் மொத்தம் 14 ஆயிரத்து 766 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (4-6)

LK Newspapers BTamil.com

# ஒப்பற்ற பெருந்தொண்டன் உயர்ந்து வாழ்க!





செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு திருமுருகன்
அவர்களுக்கு இன்று மணிவிழா

உலகமெலாம் பெரும் புகழைத் தேடிக் கொண்ட
உத்தமர்க்கு மணிவிழவாம் வயதால் மூத்தும்
நிலமதனில் ஒருபொழுதும் நில்லாதென்றும்
நேசத்தால் தொண்டியற்றும் நெடிய அன்பன்
தளமதனில் கதியிழந்து வாழும் மக்கள்
தம்முடைய கடவுளென நினைந்து போற்றி
உளமதனில் பதித்தேதான் உவந்து நிற்கும்
ஒப்பற்ற திருமுருக! உயர்ந்து வாழ்க!

துர்க்கை அவள் ஆலயத்தைத் துணிந்து ஏற்று
துலங்கத்தான் கோபுரங்கள் பலவும் செய்தான்.
அர்த்தமுள தன் உரையால் அகிலமெல்லாம்
ஆண்டேற்ற பொருளெல்லாம் கொணர்ந்து கொட்டி
நர்த்தனங்கள் புரிந்தான் தன் தொண்டினாலே
நானிலமும் கைகூப்ப உயர்ந்து நின்றான்
கர்த்தன் இவன் மணிவிழவைக் காணும் பேறால்
கற்றோர்கள் மனம் நிறைந்தார், காக்கும் தெய்வம்!

மூத்தவரைக் காத்தேதான் முறைகள் செய்தான்
மொட்டான இளையோர்க்கும் வழிகள் செய்தான்
சேத்திருந்த பொருள் அனைத்தும் செலவு செய்து
சிறப்புடனே நம்வாத வூரார் தந்த
பூத்த திரு வாசகத்தின் பெருமை தன்னை
பூமியெலாம் பறை சாற்றிப் புகழும் சேர்க்க
காத்திருந்து அரண்மனையும் கட்டி வைத்தான்

காலத்தால் அழியாத பணிகள் செய்தான்.
போரதனால் சிதைந்திட்ட யாழ்ப்பாணத்தை
பொன் மகனாய் வந்துதித்து நிமிரச் செய்தான்.
வேரதென நின்றேதான் நம் மண் தாங்கி
வெற்றிகளைக் குவித்தேதான் விளங்கி நின்றான்
காரதென அன்பு மழை பொழிந்தே நின்று
கைகொடுத்து ஏழைகளின் துயரம் தீர்த்தான்
ஆரிதனைச் செய்திடுவார் அவனிதன்னில்
அன்னையவள் அருளாலே ஆயிற்றம்மா!

ஓதுகின்ற தமிழ்மொழிக்குப் பெருமை செய்தான்
ஒப்பற்ற திறங்கொண்ட நாவினாலே
பூதலத்தில் அறப்பணிகள் பலவும் செய்தான்
போற்றுகிற தமிழ்தந்த செல்வத்தாலே
நாதவடிவானவளாம் துர்க்கை அன்னை
நற்பணிகள் செய்தான் தன் பக்தியாலே
சாதனைகள் கல்வியிலும் இளையோர் கொள்ள
தனி வழிகள் காட்டினனாம் அறிவதாலே

கம்பனது கழகமதில் கனிந்து நல்ல
கற்போடு பற்பலவாம் பணிகள் செய்தான்
நம்பியிவன் துணையதனால் நாமும் நல்ல
நற்பணிகள் பல இயற்றிப் புகழும் கொண்டோம்.
எம்முடைய பிள்ளை இவன் என்றே பேசி
இன்றிவனால் தலைநிமிர்ந்தோம், ஏற்றங்கொண்டோம்.
தெம்புடனே பல்லாண்டு வாழ்ந்து இந்த
தேசமெலாம் புகழ்ந்திடவே நிமிர்க ஐயன்!

மங்களமாய் நூறாண்டு வாழ்க ஐயன்!
மனம் நிறைந்து வாழ்த்துகிறேன் மகிழ்ந்து போற்றி!
பொங்குகிற பெருவாழ்வு இவனுக்காகி
பொலிந்திடவே வேண்டுமெனப் போற்றி நின்றேன்.
எங்களுடை கழகத்தில் இருந்து இன்று
ஏற்றத்தால் விண்ணதனைத் தொட்டு நிற்கும்
தங்கமிவன் பெரும் புகழும் தரணிதன்னில்
தழைத்தேதான் ஓங்கிடுக! தமிழ்த்தாய் காப்பாள்.

- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களை தேவையேற்பட்டால் வெளியேற்றுவோம்



(கொழும்பு)

காசா மற்றும் இஸ்ரேலின் முன்னேற்றங்களை இலங்கை கண்காணித்து வருகிறது. தேவை ஏற்பட்டால் காசா மற்றும் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசா மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் நடந்த கடுமையான மோதல் எகிப்தின் தலையீட்டால் கடந்த வெள்ளிக்கிழமை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

11 நாட்கள் நீடித்த கடுமையான சண்டையில் காசாவில் குறைந்தது 242 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 13 பேர் இஸ்ரேலில் கொல்லப்பட்டதாக வெளிநாட்டு ஊடக அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் காசாவின் முன்னேற்றங்கள் தினசரி மதிப்பீடு செய்யப்படுவதாக பிராந்திய கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

காசாவிற்கு அருகில் ஒரு சில இலங்கையர்கள் வேலை செய்கிறார்கள். மற்றவர்கள் இஸ்ரேலில் உள்ளனர். இலங்கை சமூகத்தின் சிறந்த நலனை அரசாங்கம் எப்போதும் மனதில் கொண்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் கூறினார்.

(ம-6)

# கொரோனா எங்கிருந்து பரவியது? கண்டுபிடிக்க பிடன் உத்தரவு



(அமெரிக்கா)

**கொரோனா வைரஸ் எங்கிருந்து முதலில் பரவியது என்பது தொடர்பான அறிக்கையை 90 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று உளவுத்துறை அதிகாரிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் உத்தரவிட்டுள்ளார்.**

தங்கள் முயற்சிகளை இரட்டிப்பு வேகத்தில் செய்து முடிக்கும்படியும் விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி அமெரிக்காவின் மருத்துவ ஆய்வு கூடங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சீனாவின் ஆய்வு கூடத்திலிருந்து தான் கொரோனா வைரஸ் பரவியது என்று கூறப்படுவது குறித்தும் விசாரிக்க ஜோ பிடன் உத்தரவிட்டுள்ளார். சர்வ தேச விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் சீனாவுக்கு ஜோ பிடன் வலியுறுத்தியுள்ளார் .

(4-6)

# மேலும் மூன்று மாவட்டங்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

குருநாகல், காலி மற்றும் மாத்தறை மாவட்ட மக்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

மேல் மாகாணத்துக்கு வெளியே கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று மன்தினம் குருநாகல் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று முதல் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு இலங்கையை வந்தடைந்த 5 லட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் ஏற்றப்படும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

(4-6)

# சபுகஸ்கந்தையில் புதிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம்



(கொழும்பு )

சபுகஸ்கந்தயில் ஒரு புதிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாளாந்தம் ஒரு இலட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் இதனுடாக சுத்திகரிக்கப்படவுள்ளது.

அத்துடன், தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை நாளாந்தம் 45 ஆயிரம் பீப்பாய் எண்ணெயை சுத்திகரிக்க கூடியவாறு புதுப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி அளித்திருப்பதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குறித்த செயற்திட்டங்களுக்கும் 600 பில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(4-6)

# உர விநியோகங்கள் முல்லையில் துரிதகதியில்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலிசாரின் உதவியுடன் உரங்களை விநியோகிப்பதற்கான முயற்சிகளில் கமநல சேவை நிலையங்கள் ஈடுபட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பத்து கமநல சேவை நிலையங்களிலும் சிறுபோகத்திற்குத் தேவையான உரங்கள் பயணத் தடை காரணமாக விநியோகிக்க முடியாத நிலைமை காணப்பட்டது.

கமநல சேவை நிலையங்களில் இருந்து உரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்த நிலையில் கொழும்பில் இருந்து கமநல சேவை நிலையங்களுக்கு உரங்களை விவசாயிகளுக்கு உடனடியாக விநியோகிக்குமாறு கிடைக்கப் பெற்ற தகவலினை அடுத்து பொலிசாரின் உதவியுடன் உரங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கையினை கமநல சேவை நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.

(4-6.350)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனாவைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் கொழும்புத்துறை மேற்கு வதறிபீடம் விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சங்கர இராஜ இராஜேஸ் வரக் குருக்கள் அவர்களின் அருளாசி உரையும் வேதபாராணமும் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலி பரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(4-6)

# சந்தைப்படுத்த முடியாத மரக்கறிகளுக்கு மாற்று நடவடிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முழங்காவில் பிரதேசத்தில் உற்பத்திச்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முழங்காவில் விநாயகர் விவசாய கூட்டுறவு சங்கத்தினரால் இவ் உற்பத்திச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இவ் உற்பத்திச் சாலையில் பூசணிக்காய் வத்தல் பதனிடுதல், மரவள்ளி பதனிடுதல் மற்றும் பவுடர் ஆக்குதல், வாழைக்காய் பவுடர் ஆக்குதல் எனபல்வேறு உற்பத்திகளும் இந்த உற்பத்திச்சாலையில் இடம்பெற்று வருகிறது.

நாட்டில் ஏற்படுகின்ற அசாதாரண சூழ்நிலை காரனமாக வாழைச்செய்கை, பூசணி, பப்பாசி, மரவள்ளி ஆகிய பயிர்ச் செய்கைகள் செய்து அதனை விவசாயிகளினால் சந்தைப் படுத்த முடியாத நிலைகளில் அவர்களின் நலன் கருதியும் இந்த முயற்சி முன்னெடுக்கப் பட்டுள்ளது.

(4-6.316)

# கலாநிதி ஆறு. திருமுருகனுக்கு இன்று அகவை அறுபது



செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அகவை அறுபதை எய்துவதையொட்டி இணையவழியில் இடம்பெறும் வாழ்த்து நிகழ்ச்சி இன்று இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை சூம் செயலி ஊடாக நடைபெறவுள்ளது.

நிகழ்வில் துமி அமைப்பினரால் கலாநிதி ஆறு. திருமுருகனின் சேவைகள் குறித்த ஆவணப்படமும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பங்கேற்பதற்கான **சூம் இலக்கம் - 921 7106 1997**
**கடவுச்சொல் – KTC** (4-6.18)

# மணல் டிப்பர்களுக்கு பயணத்தடை இல்லையா?

## பிரதேச சபை உறுப்பினர் கேள்வி

(அக்கராயன்)

மணல் கொண்டு செல்லும் டிப்பர்களுக்கு பயணத்தடைச் சட்டம் இல்லையா என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் செ.பிறேமகாந் வினா எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. அத்தியாவசிய பொருட்கள் வாங்க பயணத்தடை அதிகாலை 4 மணி தொடக்கம் இரவு 11 மணி வரை தளர்த்தப் படுவதாக அரசாங்கம் அறிவித்து இருந்தது. பொருட்களை வாங்க அருகில் உள்ள கடைகளுக்கு செல்ல வேண்டும். அதுவும் நடந்து மட்டுமே செல்ல முடியும். அருகில் உள்ள கடையில் அனைத்துப் பொருட்களும் கிடைக்காது.

திருமுறிகண்டி கிராம மக்கள் கிளிநொச்சி நகரத்திற்கு சென்று அதிகரித்த விலையில் உணவுப் பொருட்களை வாங்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

திருமுறிகண்டியில் இருந்து 12 கிலோ மீற்றர் தூரம் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் செல்ல வேண்டி உள்ளனர். பயணக் கட்டுப்பாடுகள் சாதாரண மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிலையில் மணல் டிப்பர்கள் வீதிகளில் இலகுவாகப் பயணிக்கின்றன. மணல் டிப்பர்களினால் கொரோனா பரவாதா?. பயணக் கட்டுப்பாடு என்பது எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

(4-6.350)




**(அக்கராயன்)**

**முல்லைத்தீவு மாங்குளம் நகரத்தில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**(படம் : கிருஸ்ணகுமார்)**

# உள்ளூராட்சி மன்ற சுகாதார ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கவேண்டும்

(முறிகண்டி)

கொரோனா சிகிச்சை நிலையங்களில் பணியாற்றும் உள்ளூராட்சி மன்ற சுகாதார ஊழியர்களிற்கு தடுப்பூசி வழங்குவதுடன், விசேட கொடுப்பனவையும் வழங்குங்கள் என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர்சந்திப்பின்போதே, குறித்த சங்கத்தின் வடமாகாண இணை தலைவர் ஆறுமுகம் புண்ணிய மூர்த்தி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கில் 2000க்கு மேற்பட்ட சுகாதார ஊழியர்கள் நிரந்த நியமனம் இல்லாது சேவையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் அனைவரும் உள்ளூராட்சி மன்றங்களில்பணியாளர்களாக 3 ஆண்டுகளிற்கு மேல் சேவையில் ஈடுபடுகின்றனர். தற்போது உள்ள கொவிட் 19 அச்சுறுத்தல் நிறைந்த சூழலிலும் அவர்கள் தமது சுத்திகரிப்பு பணிகளை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் அவர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு கொவிட் தடுப்பு ஊசியை அவர்களிற்கு வழங்க முன்வர வேண்டும் என நாங்கள் கோரிக்கை முன்வைக்கின்றோம். அத்துடன் அவர்களின் குடும்பங்களிற்கும் குறித்த தடுப்பு ஊசியை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்களிற்கு இலகுவாக தொற்று பரவக்கூடிய சூழல் காணப்படும் நிலையில் தடுப்பூசியை அவர்களிற்கு செலுத்த வேண்டும். அத்துடன், நிரந்தர நியமனம் இல்லாது சேவையில் ஈடுபடும் ஊழியர்களிற்கான நிரந்தர நியமனத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

(4-6.100)

Newspapers
BTamil.com



# சிறுவர் அரங்கம்

## தேவதை கொடுத்த பரிசு



நெல்லிக்குப்பம் என்ற கிராமத்தில் இரண்டு மீனவர்கள் நண்பர்களாக இருந்தனர்.

ஒரு நண்பரின் பெயர் ஜெகதீஸ், மற்றவன் பெயர் பிரகாஷ்.

இருவரும் தினமும் காலை நேரத்தில் கட்டுமரத்தில் ஏறி, மீன் பிடிக்கச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் காலை நேரத்தில் இருவரும் வழக்கம் போல் மீன் பிடிக்கச் சென்றனர்.

அன்றைய தினம் மாலை நேரம் ஆகியும் கூட இருவர் வலையிலும் போதுமான மீன்கள் சிக்கவில்லை.

மிகக் குறைந்த அளவிலேயே மீன்கள் மாட்டின. கரையை அடைந்த இருவரும் தங்களுக்குக் கிடைத்த மீனைப் பங்கிட்டுப் பார்த்தனர்.


"நண்பனே, இந்த மீன்களை விற்று அதில் கிடைக்கும் பணத்தில் நம் இருவர் குடும்பத்திற்கும் போதிய உணவுப் பொருட்களை வாங்கிச்சமைப்பது கடினம்.

அதனால், மீன் விற்றுக் கிடைக்கும் பணத்தினை நம்மில் ஒருவரே எடுத்துக்கொள்ளலாம்" என்றான் பிரகாஷ்.

"அப்படியானால்நீயே எடுத்துக்கொள். நீதான் மனைவி, மக்களோடு இருக்கிறாய். உன் குடும்பத்தை வறுமையில் வாட விடாதே. நீயே எடுத்துக்கொள்," என்றான் ஜெகதீஸ்.

"இல்லை நண்பனே! உன் குடும்பத்தில் இரண்டு நபர்கள் அதிகமாக இருக்கின்றனர். அதனால் நீதான் எடுத்துக்கொள்ள வேண்டும்," என்றான் பிரகாஷ். "இல்லை நண்பனே, இல்லை கண்டிப்பாக நீதான் எடுத்துக்கொள்ள வேண்டும். உன்குடும்பத்தைவறுமையில் தவிக்க நான் என்றுமேவிடமாட்டேன்என்று அழுத்தமாகக்கூறினான் ஜெகதீஸ் (தொடரும்)

## மகாபாரதம்




மற்றொருபுறம்துரோணரும், திருஷ்டத்துய்மனும்கடும்போர்புரிந்தனர். திருஷ்டத்துய்மனுக்கு உதவியாக பீமன் வந்தான். அவனைத் தடுத்து நிறுத்த துரியோதனன் கலிங்கப் படையை ஏவினான்.

ஆனால் பீமன் அப்படையைக் கதிகலங்க வைத்தான். அப்படைக்கு உதவ பீஷ்மர் வந்தார்.

அவரை அபிமன்யுவும் சாத்யகியும் சேர்ந்து தாக்கினார். அவர்களது தாக்குதலால் பீஷ்மரின் தேர்க் குதிரைகள் நிலை குலைந்து தாறுமாறாக ஓடின.

இதனால் அருச்சுனனை எதிர்ப்பாரில்லை. அவன் விருப்பம் போல கௌரவ வீரர்களைக் கொன்று குவித்தான்.

அவன் யாராலும் வெல்ல முடியாதவனாகக் காட்சியளித்தான். அப்போது சூரியன் மறைய அன்றைய போர் முடிவுற்றது.

### மூன்றாம் நாள் போர்

இரண்டாம் நாள் போரில் கௌரவர் கை தாழ்ந்திருந்தது. அதனால் மூன்றாம் நாள் போரை மாற்றி அமைக்க பீஷ்மர் விரும்பினார்.

படைகளை கருட வியூகமாக அமைத்தார். அதன் தலைப்பக்கம் பீஷ்மர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமா, சல்லியன், பகதத்தன் ஆகியோர் பொருத்தமான இடத்தில் நின்றனர்.

துரியோதனன் அவ்வியூகத்தின் பின் புறத்தில் நின்றான். அதை முறியடிக்கும் விதத்தில் பாண்டவர்களின் தளபதியான திருஷ்டத்துய்மன் தன் படைகளை பாதி சக்கர வியூகமாக அமைத்தான்.

அவன் வலப்பக்கமாக நின்றான். அதன் இரண்டு பக்கங்களிலும் பீமனும், அருச்சுனனும் நின்றனர். தர்மர் இடையில் நின்றார்.

மற்றவர்கள் பொருத்தமான இடங்களில் நிறுத்தப்பட்டனர். உச்சக் கட்டம் அடைந்தது அன்றைய போர்.

(தொடரும்)

### தடுப்பூசி மூலமே தப்பிக்க முடியும்

# இந்த ஆண்டு இறுதிவரையிலும் கொரோனாவுடன் போராட நேரிடும்

### விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன

(கொழும்பு)

இலங்கையில் 70 வீதமானோருக்கேனும் தடுப்பூசியை ஏற்றினால் மாத்திரமே கொரோனா வைரஸ் பரவலில் இருந்து தப்பிக்க முடியும் என்று தேசிய மருந்தாக்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிகளை இந்த ஆண்டு இறுதிவரையில் நாடு எதிர்கொள்ள நேரிடும். நாட்டில் 70 வீதமானவர்களுக்கேனும் தடுப்பூசிகளை ஏற்றிய பின்னரே வழமையான செயற்பாடுகள் குறித்து சிந்திக்க முடியும்.

அடுத்தகட்டத்தில் மரணங்கள் அதிகரிக்கும் என்ற அச்சுறுத்தல் இருக்கின்ற காரணத்தால் வயதானவர்களுக்குத் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

நாட்டின்தற்போதுள்ள நிலைமை ஆரோக்கியமானதாகக் கருத முடியாது. தொடர்ச்சியாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

எனவே, தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்திக் கொண்டுளோம். குறிப்பாக இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கைக்கு 3 கோடி 20 இலட்சம் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் உடன்படிக்கைகளைச் செய்துள்ளோம். இதில் ஒரு கோடியே 30 இலட்சம் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளும் 50 இலட்சம் பைசர் தடுப்பூசிகளும் ஒரு கோடியே 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளும் நிச்சயமாகக் கிடைக்கும்.

அதற்கும் அப்பால் ஜோன்சன் அன் ஜோன்சன் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளவும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறு இருப்பினும் உலக நாடுகள்



அனைத்துமே பாரிய நெருக்கடியில் உள்ள நிலையில், அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளையும் உலக சுகாதார ஸ்தாபனம் வழங்குவதாகக் கூறிய தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளது.

இந்த ஆண்டு இறுதிவரையிலும் கொரோனா வைரஸ் தொற்றுடன் போராட நேரிடும். 70 வீதமானவர்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றிய பின்னரே எம்மால் அடுத்தகட்ட வழமையான செயற்பாடுகள் குறித்தும் சிந்திக்க முடியும். தற்போதுள்ள நிலையில் ஆண்டு இறுதி வரைக்கும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும்" என்றார். (ம-03)

### கொழும்பில் கடந்த 6 நாட்களாக

# கப்பலில் ஏற்பட்ட தீ கட்டுக்குள் வந்தது

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திலிருந்து 9 கடல்மைல் தூரத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த நிலையில் கடந்த 6 நாட்களாக தீப்பற்றி எரிந்த கப்பலில் தீ முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் டுவிட்டர் பதிவில் இவ்விடயம் கூறப்பட்டிருக்கிறது.

அதேபோல இலங்கைக் கடற்படையும் இதனை உறுதிசெய்தது.

இந்தியாவின் மூன்று கடலோரப் பாதுகாப்பு படகுகள் மற்றும் டோனர் விமானத்தின் உதவியின் ஊடாக தீ முழுமையாக அணைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. (ம-3)

# கிளிநொச்சி சிவநகரில் பாரிய குண்டு மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - உருத்திரபுரம் சிவநகர்ப் பகுதியில் போர் காலத்தில் விமானம் மூலம் வீசப்பட்டு வெடிக்காத நிலையிலிருந்த குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

காணி துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதை அடுத்து பொலிஸாரும்



படையினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். குறித்த குண்டை பாதுகாப்பாக செயலிழக்க செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-03,100,316)






# மன்னாரில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட கர்ப்பவதி

### பெண் குழந்தையை பெற்றெடுத்தார் சிசுவுக்கு தொற்றில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் கொரோனா தொற்றுக்குள்ளான கர்ப்பவதி பெண் ஒருவர், குழந்தையை பிரசவித்துள்ளார்.

41 வயதான குறித்த கர்ப்பவதி பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் கண்காணிப்பில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 24ஆம் திகதி குறித்த பெண் குழந்தையை பிரசவித்துள்ளார். இதனையடுத்து குழந்தைக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டது.

ஆனாலும் குழந்தைக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

# மகிந்தவுடன் பாகிஸ்தான் தூதுவர் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் முஹம்மத் சாத் கட்டாக் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு இடையே சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு, கல்வி, விளையாட்டு போன்ற துறைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை- பாகிஸ்தான் இடையிலான கலாசார மற்றும் மத ரீதியான சுற்றுலாத்துறையை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. (ம-3)


ZOOM CLASSES ஆரம்பம்

சதா் பெரன்ஸ் கல்வி நிலையம்
அல்வாய்

29.05.2021 சனிக்கிழமை முதல் மாலை நேரங்களில் 11 ஆம் 10 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு சகல பாடங்களும் நடைபெறும். குறூப்பில் இணைந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்.

(முதல் 2 வகுப்புக்கள் இலவசம். இலங்கையின் எப்பாகத்தில் உள்ளவர்களும் இணைந்து கொள்ளலாம்.)

077 925 0105

(C-2193)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2021 இல் வெளியிடப்பட்டது.